# HOW TO GET FULL SCORE IN ORAL EXAM - REVISION GUIDE P5
# தொடக்கநிலை 5 - வாய்மொழித் தேர்வு வழிகாட்டி & பயிற்சி நூல்

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | **வாசிப்புப் பனுவல்கள்** | |
| 1. | பனுவல் 1 - 12 | 1 - 12 |
| | **காணொளித் தலைப்புகள்** | |
| 1. | பொறுப்புணர்வு (Responsibility) | 13 - 18 |
| 2. | நன்றியுணர்வு (Gratefulness) | 19 - 24 |
| 3. | அலட்சியம் (Negligence) | 25 - 30 |
| 4. | அன்பு காட்டுதல் (Showing Love) | 31 - 36 |
| 5. | பரிவு (Kindness) | 37 - 42 |
| 6. | ஒழுக்கம் (Discipline) | 43 - 48 |
| 7. | பொறாமை (Jealousy) | 49 - 54 |
| 8. | துணிவு (Bravery) | 55 - 60 |
| 9. | தன்னம்பிக்கை (Self-Confidence) | 61 - 66 |
| 10. | உதவி (Help) | 67 - 72 |
| 11. | தூய்மைக்கேடு (Pollution) | 73 - 78 |
| 12. | தேசிய தின விழா (National Day Celebration) | 79 - 84 |
| 13. | பள்ளி முகாம் (School Camp) | 85 - 90 |
| 14. | சாலை விபத்து (Road Accident) | 91 - 96 |
| 15. | குடும்ப நேரம் (Family Time) | 97 - 102 |
| 16. | அவமானம் (Disgrace) | 103 - 108 |
| 17. | நன்கொடை (Charity) | 109 - 114 |
| 18. | தொண்டூழியம் (Volunteerism) | 115 - 120 |
| 19. | கூடா நட்பு (Bad Friendship) | 121 - 126 |
| 20. | மீளும் தன்மை (Changeability/Reversibility) | 127 - 132 |
| | **விடைத்தாள்** | |
| 1. | விடைகள் | 133 - 155 |

# 1. பொறுப்புணர்வு (Responsibility)

**சொல்வளம்**

1. ஒழுக்கம் (discipline) 2. கடமை (duty) 3. சுத்தம் (clean) 4. வருத்தம் (sad) 5. பொறுப்பு (responsible) 6. அலட்சியம் (negligence) 7. குப்பைத் தொட்டி (rubbish bin) 8. பாராட்டு (praise) 9. கண்காணிப்பு கருவி (CCTV) 10. பெருமை (proud).

**காணொளி சூழல்**

மதன் - மாலை வேளை - நண்பர்களுடன் காற்பந்து (football) விளையாடிவிட்டு வீடு திரும்புதல் - அடுக்குமாடி குடியிருப்பின் கீழ் தின்பண்ட பொட்டலங்கள் சிதறிக் (scatter) கிடப்பதைக் கண்டு திடுக்கிடுதல் (shocked) - சிறுவர்கள் அதை அலட்சியமாகப் போட்டுச் சென்றிருக்க வேண்டும் என வருத்தம் அடைதல் - மதனும் நண்பர்களும் பொறுப்புடன் பெரிய நெகிழிப் பையை எடுத்து தின்பண்டப் பொட்டலங்களை அதில் போடுதல் - சிறிது நேரத்தில் அந்த இடம் சுத்தமாகுதல் - அந்த நெகிழிப் பையைக் குப்பைத் தொட்டியில் (rubbish bin) போடுதல் - மறுநாள், குடியிருப்புப் பகுதியில் கூட்டம் (meeting) நடைபெறுதல் - குடியிருப்புப் பகுதியின் தலைவர் அவர்களை மேடைக்கு அழைத்து அவர்கள் சுத்தம் செய்ததைப் பாராட்டுதல் - அவர்கள் ஆச்சரியத்துடன் மேடையேறுதல் - அவர்களின் செயல் அங்கிருந்த கண்காணிப்பு கருவியில் பதிவாகியிருத்தல் (recorded) - குடியிருப்பாளர்கள் மதன் மற்றும் நண்பர்களின் பொறுப்புணர்வைக் கைத்தட்டி (clapped) பாராட்டுதல் - மதனும் நண்பர்களும் பெருமை கொள்ளுதல்.

**காணொளியில் எவ்வாறு தகவலைப் பெறலாம்?**



**வினாக்களுக்கு விடையளிக்கும் உத்தி**

**1. காணொளியில் மதன் நெகிழிப் பைகளைக் கண்ட பின் என்ன நடந்தது?**

| **POINT / கருத்து** | **மதனும் நண்பர்களும் அவற்றைச் சுத்தம் செய்தனர்** |
|---|---|
| **REASON / காரணம்** | • அந்த இடம் அசுத்தமாகக் (dirty) காணப்பட்டது.<br>• அவ்விடத்தைச் சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்புணர்வு அவர்களுள் இருந்தது. |
| **EXAMPLE / உதாரணம்**<br>**(or / அல்லது)**<br>**EXPLAIN / விளக்கம்** | • நெகிழிப் பைகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்ததால் அந்த இடம் அசுத்தமாக (dirty) இருந்தது.<br>• மதனும் நண்பர்களும் தங்களின் குடியிருப்புப் பகுதியின் தூய்மையைப் பேணுவதின் (maintain) அவசியத்தை உணர்ந்தனர்.<br>• அவர்கள் ஒற்றுமையாக சிறிது நேரத்தில் அவ்விடத்தைச் சுத்தம் செய்தனர். |

| **POINT / கருத்து** | **குடியிருப்புப் பகுதியில் இருப்போர் அவர்களைப் பாராட்டினர்** |
|---|---|
| **REASON / காரணம்** | • குடியிருப்புப் பகுதியின் தலைவர் கூட்டத்தில் அவர்களின் நற்செயலைத் தெரிவித்தார்.<br>• குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் (stay) அனைவரும் அவர்களின் செயலைப் பாராட்டினர். |
| **EXAMPLE / உதாரணம்**<br>**(or / அல்லது)**<br>**EXPLAIN / விளக்கம்** | • மதனும் நண்பர்களும் செய்த நற்செயல் அங்கிருந்த கண்காணிப்பு கருவியில் பதிவாகியது.<br>• அதைக் கண்ட குடியிருப்புப் பகுதியின் தலைவர் அனைவரிடமும் அத்தகவலைக் கூறினார்.<br>• இதனால், அவர்களின் பொறுப்பான செயலை அனைவரும் பாராட்டினர்.<br>• மதனும் நண்பர்களும் இதனால் பெருமை அடைந்தனர். |

**2. இதுபோன்ற அசுத்தமான இடத்தைக் கண்டால் நீ என்ன செய்வாய்?**

| | |
|---|---|
| **POINT / கருத்து** | **குடியிருப்புத் தலைவரிடம் புகார் (complain) அளிப்பேன்** |
| **REASON / காரணம்** | • குடியிருப்புத் தலைவர் அப்பகுதியில் நடக்கும் செயல்களுக்குப் பொறுப்பானவர் (responsible).<br>• குடியிருப்புத் தலைவர் அதன் பின் மேலும் கவனத்துடன் (careful) இருப்பார். |
| **EXAMPLE / உதாரணம்**<br>**(or / அல்லது)**<br>**EXPLAIN / விளக்கம்** | • குடியிருப்புத் தலைவர் கவனிக்கத் தவறிய வேளையில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்திருக்கலாம்.<br>• புகார் (complain) அளிப்பதன் மூலம் அவருக்கு இச்செயல்களைப் பற்றி தெரியப்படுத்தலாம்.<br>• இதனால், அவர் குடியிருப்புப் பகுதியின் சுற்றுப்புறத்தில் அதிக கவனம் செலுத்துவார்.<br>• இதன்வழி, இம்மாதிரியான சம்பவங்கள் குறையும். |

| | |
|---|---|
| **POINT / கருத்து** | **சுயமாகச் (on my own) சுத்தம் செய்வேன்** |
| **REASON / காரணம்** | • என்னிடம் பொறுப்புணர்ச்சி உள்ளது.<br>• வேறொருவர் அச்செயலைச் செய்யும் வரை காத்திருப்பது தவறு. |
| **EXAMPLE / உதாரணம்**<br>**(or / அல்லது)**<br>**EXPLAIN / விளக்கம்** | • அனைவருக்கும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்கும் பொறுப்புணர்வு இருக்க வேண்டும்.<br>• மற்றவர் சுத்தம் செய்ய வேண்டுமென்று நாம் அலட்சியமாக இருந்தால் சுற்றுப்புறம் மேலும் அசுத்தமாகலாம்.<br>• இதனால், நமக்கு சிக்கல் (problem) ஏற்படலாம்.<br>• ஆகவே, அசுத்தமான இடத்தைக் கண்டால், நான் சுயமாகவே (on my own) அவ்விடத்தைச் சுத்தம் செய்வேன். |

WORDSMITH BEYOND LEARNING

**3. நீ பொறுப்புணர்வுடன் நடந்து கொண்ட அனுபவம் உனக்கு ஏற்பட்டுள்ளதா?**

| | |
|---|---|
| **POINT / கருத்து** | **ஆம், இது போன்ற அனுபவம் எனக்கு ஏற்பட்டுள்ளது** |
| **REASON / காரணம்** | • ஒருமுறை பள்ளியிலிருந்து நடந்து வரும்போது நடைப்பாதையில் (walkway) குப்பை இருப்பதைக் கண்டேன்.<br>• அக்குப்பையை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டேன். |
| **EXAMPLE / உதாரணம்**<br>**(or / அல்லது)**<br>**EXPLAIN / விளக்கம்** | • அந்த நடைப்பாதையில் வேறு யாரும் நடந்து செல்லவில்லை.<br>• அப்போது கண்களுக்கு ஏதோ பொருள் தென்பட்டதால் அங்குச் சென்று கண்டேன்.<br>• யாரோ குப்பையைப் போட்டுச் சென்றிருந்தனர்.<br>• அதை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, வீடு திரும்பினேன். |

| | |
|---|---|
| **POINT / கருத்து** | **ஆம், இது போன்ற அனுபவம் எனக்கு ஏற்பட்டுள்ளது** |
| **REASON / காரணம்** | • பள்ளியில் விளையாட்டுப் பாட நேரத்தில் நண்பர்கள் விளையாட்டுப் பொருட்களைக் கவனக்குறைவுடன் கையாண்டனர் (handle carelessly).<br>• நான் அவர்களிடம் பொறுப்புடன் அறிவுரை (advice) கூறினேன். |
| **EXAMPLE / உதாரணம்**<br>**(or / அல்லது)**<br>**EXPLAIN / விளக்கம்** | • விளையாட்டுப் பாட நேரத்தில் நண்பர்கள் விளையாட்டுப் பொருட்களைத் தூக்கிப் போட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.<br>• அவ்வாறு செய்தால், விளையாட்டுப் பொருட்கள் சேதம் (damage) அடையலாம் எனக் கூறினேன்.<br>• பள்ளி உடைமைகளைப் (properties) பாதுகாப்பது நம் பொறுப்பு என்று அறிவுரைத்தேன்.<br>• நண்பர்கள் மன்னிப்புக் கோரி (ask) பொறுப்பாக விளையாட்டுப் பொருட்களைக் கையாண்டனர் (handle). |

**காணொளி மூலம் வெளிப்படும் பண்புகள்** ***(ஏற்புடைய பதில்)***

| எண் | பண்பு | விளக்கம் |
|---|---|---|
| 1. | **தூய்மை**<br> | • நம் சுற்றுப்புறத்தின் தூய்மையைப் பேண வேண்டும்.<br>• அசுத்தமான இடங்களை நாமே சுயமாகச் சுத்தம் செய்ய வேண்டும்.<br>• ______________________<br>• ______________________ |
| 2. | **பொறுப்புணர்வு**<br> | • நம் குடியிருப்புப் பகுதியின் மீது பொறுப்புணர்வு இருக்க வேண்டும்.<br>• நம் சுற்றுச்சூழலைப் பொறுப்புடன் காக்க வேண்டும்.<br>• ______________________<br>• ______________________ |
| 3. | **சமயோசித சிந்தனை**<br> | • சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் (based on situation) யோசிக்க வேண்டும்.<br>• தேவையான நேரத்தில் சரியான முடிவெடுத்து வேகமாக செயல்பட வேண்டும்.<br>• ______________________<br>• ______________________ |
| 4. | **ஒற்றுமை**<br> | • நண்பர்களுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.<br>• நண்பர்கள் ஒற்றுமையாக ஒரு செயலைச் செய்ய வேண்டும்.<br>• ______________________<br>• ______________________ |
| 5. | **பாராட்டுதல்**<br> | • நற்செயல் செய்தவரைப் பாராட்ட வேண்டும்.<br>• பிறரைப் பாராட்டுவதால் அவர்கள் மகிழ்ச்சி அடைவர்.<br>• ______________________<br>• ______________________ |

**காணொளி மூலம் வெளிப்படும் உணர்ச்சிகள் *(ஏற்புடைய பதில்)***

| எண் | உணர்ச்சி | விளக்கம் |
|---|---|---|
| 1. | **திகைப்பு**<br> | நெகிழிப் பைகளைக் கண்டு திடுக்கிடுதல்.<br>• வாயைத் திறத்தல்.<br>• கண்கள் அகல விரிதல்.<br>• ______________________________<br>• ______________________________ |
| 2. | **சலிப்பு**<br> | சிறுவர்கள் குப்பைகளைத் தவற விட்டுச் செல்லுதல்.<br>• மனதில் பயமின்மை.<br>• அசட்டுத்தனமான சிரிப்பு.<br>• ______________________________<br>• ______________________________ |
| 3. | **வருத்தம்**<br> | பிறர் பொறுப்பற்ற செயலை எண்ணி வருந்துதல்.<br>• முகம் வாடுதல்.<br>• தலை குனிதல்.<br>• ______________________________<br>• ______________________________ |
| 4. | **ஆனந்தம்**<br> | தன் செயலை நினைத்து ஆனந்தம் அடைதல்.<br>• கண்கள் ஆனந்ததில் மூடுதல்.<br>• மனம் திருப்தி அடைதல்.<br>• ______________________________<br>• ______________________________ |
| 5. | **அச்சம்**<br> | சுற்றுச்சூழல் அசுத்தமானால் நோய் வரலாம் என அச்சமடைதல்.<br>• மனம் நிம்மதி இழத்தல்.<br>• கைகள் படபடத்தல்.<br>• ______________________________<br>• ______________________________ |

# விடைத்தாள்

## 2. நன்றியுணர்வு

| யார்? | என்ன? |
|---|---|
| • அருண்<br>• காவலர்<br>• பெரியவர்<br>• தலைமையாசிரியர் | • பணப்பையைக் காணுதல்<br>• காவல் நிலையத்தில் ஒப்படைத்தல் |

**1. காணொளியில் அருண் பணப்பையை கண்ட பின் என்ன நடந்தது?**

| POINT / கருத்து | காவல் நிலையத்தில் பணப்பையை ஒப்படைத்தல் |
|---|---|
| REASON / காரணம் | • பணப்பை அருணுக்குச் சொந்தமானது அல்ல<br>• காவலர்கள் பணப்பையின் உரிமையாளரைக் (owner) கண்டுபிடித்து அதை ஒப்படைத்து விடுவர். |
| EXAMPLE / உதாரணம் (OR / அல்லது) EXPLAIN / விளக்கம் | • பணப்பையைத் தொலைத்தவர் மிகுந்த வருத்தத்தில் இருப்பார்.<br>• அருண் இன்னும் சிறுவன் என்பதால் உரிமையாளரின் முகவரியைக் கண்டுபிடிக்க சிரமமாக இருக்கும்.<br>• <u>காவல் நிலையத்தில் பணப்பையை ஒப்படைத்தால், அவர்கள் எளிமையாக உரிமையாளரைக் கண்டுபிடித்து விடுவர்.</u><br>• <u>பணப்பையின் உரிமையாளரும் மகிழ்ச்சி கொள்வார்.</u> |

| POINT / கருத்து | பெரியவர் அருணைப் பள்ளியில் காணுதல் |
|---|---|
| REASON / காரணம் | • பெரியவர் அருணுக்கு நன்றி கூறுதல்.<br>• பெரியவர் நன்றி கூறும் வகையில் அருணுக்குப் பரிசளித்தல். |
| EXAMPLE / உதாரணம் (OR / அல்லது) EXPLAIN / விளக்கம் | • பெரியவர் காவல் நிலையத்தில் அருணின் தகவலைப் (information) பெற்றிருப்பார்.<br>• மறுநாள், பள்ளி வேளையில் அருணைக் காணச் சென்றார்.<br>• <u>அருணைக் கண்டு ஆரத்தழுவி நன்றி கூறினார்.</u><br>• <u>அவர் அருணுக்கு மடிக்கணினியைப் பரிசளித்தார்.</u> |

**2. இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போது மாணவர்கள் என்ன செய்யலாம்?**

| POINT / கருத்து | பெற்றோரிடம் கூறலாம் |
|---|---|
| REASON / காரணம் | • சில மாணவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியாது.<br>• பெற்றோர் அடுத்து என்ன செய்யலாம் என வழிகாட்டுவர் (guide). |
| EXAMPLE / உதாரணம் (OR / அல்லது) EXPLAIN / விளக்கம் | • மாணவர்களுக்கு இதுபோன்ற சம்பவங்களில் குறைந்த அனுபவம் (experience) இருக்கும்.<br>• பெற்றோருக்கு எந்தெந்த சூழ்நிலையில் (situation) எப்படி செயல்பட வேண்டும் என்று தெரியும்.<br>• <u>ஆகையால், பெற்றோரின் நடவடிக்கையைக் (action) கண்டு மாணவர்களும் கற்றுக் கொள்ளலாம்.</u><br>• <u>இது எதிர்காலத்தில் மாணவர்களுக்கு உதவும்.</u> |

| POINT / கருத்து | காவல் நிலையத்தை நாடலாம் |
|---|---|
| REASON / காரணம் | • காவலர்கள் மிக நம்பிக்கையாகச் (trustful) செயல்படுவர்.<br>• காவலர்கள் எளிதாக மாணவர்க-ளுக்கு உதவுவர். |
| EXAMPLE / உதாரணம் (OR / அல்லது) EXPLAIN / விளக்கம் | • காவலர்களுக்கு இதுபோன்ற சம்பவங்களைக் கையாண்ட (handle) அனுபவம் அதிகம் இருக்கும்.<br>• ஆகையால், அவர்கள் மிகத் துரிதமாகச் (fast) செயல்படுவர்.<br>• <u>மாணவர்களும் சம்பந்தப்பட்ட நபரைத் (person) தேடி அலைய அவசியம் இருக்காது.</u> |

**3. பிறர் உனது உதவிக்கு நன்றி கூறிய அனுபவம் உனக்கு ஏற்பட்டுள்ளதா?**

| POINT / கருத்து | ஆம், இது போன்ற அனுபவம் எனக்கு ஏற்பட்டுள்ளது |
|---|---|
| REASON / காரணம் | • ஒருமுறை முதியவர் ஒருவருக்குச் சாலையைக் கடக்க (cross) உதவினேன்.<br>• அவர் எனக்கு நன்றி தெரிவித்தார். |
| EXAMPLE / உதாரணம் (OR / அல்லது) EXPLAIN / விளக்கம் | • ஒரு முதியவர் சாலையைக் கடக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்.<br>• நான் அங்கிருந்த பாதசாரிகளின் (pedestrians) போக்குவரத்து விளக்கை (traffic light) அழுத்தியதும் அது பச்சை நிறத்தில் மாறியது. |

WORDSMITH BEYOND LEARNING